கின்றது. இப்பொழுது பெரும்பாலும் நகர்ப்புறங்களிலே மட்டும்தான் கன்ஸ்யூமர் கவுன்சில்கள் இருக்கின்றன. இதைக் கிராமங்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும், பரவலாக்க வேண்டுமென்பதில் அரசு அக்கறை எடுத்து, யார் யார் எங்கெங்கே இப்படிப்பட்ட இயக்கங்களைத் தோற்றுவிக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் ஆலோசனை வழங்கி அவர்களுக்கு நிதியுதவிகூட வழங்கி வருகின்றோம். நான் இந்த நேரத்தைப் பயன்படுத்தி, மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும், இதிலே அக்கறை எடுத்துக்கொண்டு இதைக் கவனித்துப் பரப்புவதற்காக உதவி புரிய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.எஸ். துரைமுருகன்.

திரு. கே.எஸ். துரை முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வரும்பொழுது (Medical Services and Legal Services) மருத்துவப் பணி மற்றும் வழக்கறிஞர்கள் பணி அந்தச் சட்டத்தினுடைய வரைமுறைக்குள் கொண்டு வரப்படுகின்ற யோசனை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மருத்துவம், அதே போல சட்டம்—சட்டத் துறை, இன்னும் அதுபோக வீட்டு வசதி, லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷன் இவைகளைக்கூட கன்ஸ்யூமர் கோர்ட்டுக்கு அடியிலே கொண்டு வர வேண்டும் என்ற திருத்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் மைய அரசு இன்னும் அதிலே முடிவு எடுக்கவில்லை. முடிவெடுத்து அதற்குப் பிறகு நாடாளுமன்றத்திலே அது நிறைவேறிய பின்னால்தான் எது எது உறுதியாக வரும் என்பதைச் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 55, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

55—

## விவசாயிகள், தொழிலாளர்கள் கட்டிய இன்சூரன்ஸ் பணத்தை திரும்பக்கொடுக்க நடவடிக்கை.

*10860—திரு.எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் இன்சூரன்ஸ் திட்டமாக மாதம் ரூ. 10 கட்டி வந்ததை திட்டம் நிறுத்தப்பட்டதால் கட்டிய பணத்தை திரும்ப கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

[1992 செப்டம்பர் 23

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உறுப்பினர்கள் செலுத்திய சந்தாத் தொகையை உறுப்பினர் களுக்குத் திருப்பியளிக்க தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசாணை எண் 480 நாள் 23—3—90ல் ஆணைகள் இடப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்குமாக இந்த இன்சூரன்ஸ் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்திலே இந்தத் திட்டத்தை உருவாக்கினார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக ஏழை எளியவர்கள், கிராமத் திலுள்ள இந்தத் தொழிலாளர்களுக்கு இது பயன் தரக்கூடிய திட்டமாக இது இருந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்தை எதற்காக கை விட்டார்கள் என்று தெரியவில்லை. இந்தத் திட்டத்தைக் கைவிட்டதற்குப் பின்னால் இந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லியிருந்த பணமானது பல இடங்களிலே அவர்கள் பாஸ் புக்கையெல்லாம் திருப்பிக் கொடுத்த பின்னாலும் கூட, எங்களுடைய பகுதியிலே, தென்காசி, அதைப்போல, வி.கே. புதூர் தாலுக்காக்களிலேயெல்லாம் இன்னும் திருப்பிக் கொடுக்கப்படாமல், நீங்கள் ஆணையிட்ட பின்னாலும்கூட இன்னும் அது இருக்கின்றது ஏன் என்பதை அரசு அறியுமா? அரசு இது சம்பந்தமாக விளக்கங்களைக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை 10,68,990 நபர்களுக்குப் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 2,77,367 பேர் களுக்கும் பணம் திருப்பிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை ஆதாரத்தோடு உறுப்பினர் அவர்கள் சொன்னால் உரிய நட வடிக்கை எடுத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.பி. சந்திர சேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இருபதாண்டுக் காலமாகப் பொள்ளாச்சி பகுதியிலே இருக்கின்ற பாரம் தூக்கும் தொழிலாளர்கள், வேறு எந்தக் கட்சிக்கும் ஒரு உறுப்பினர்கூட இல்லை என் கின்ற ஒரு பெருமையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களாக இருந்து

1992 செப்டம்பர் 23]

பெருமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த உடனேயே அங்கே இருக்கிற அத்தனைத் தொழிலாளர்களும், இந்தத் திட்டத்திலே சேர்ந்து, மாதம் 10 ரூபாய் கட்டிக் கொண்டிருந்தார்கள். அப்படி கட்டிய நேரத்திலே அந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தின் மூலமாக ஒருசில தொழிலாளர் களுக்கும். . . .

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் பேரவையின் முன்னனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது. திரு. சந்திரசேகர், கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வி.பி. சந்திரசேகர்: இந்தத் திட்டத்தின் மூலமாக தொழிலாளர்களும் அதில் நன்மை பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இந்த சிறப்பான திட்டத்தை அரசியல் காழ்ப் புணர்ச்சி காரணமாக திராவிட முன்னேற்றக் கழக அரசு நீக்கியிருக்கிற நேரத்திலே, இந்த திட்டம் நல்ல திட்டம் என்கின்ற வகையிலே, மீண்டும் அதை கொண்டுவர மாண்பு மிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முன்வருமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அமலாக்கப்படுவதிலே ஏற்பட்ட பல்வேறு சிரமங்களுக்கு இடையிலேதான் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதிலே 18 வயது முதல் 55 வயது வரையுள்ளவர்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்க வேண்டும். ஆனால், 58 வயதுக்கு மேல் உறுப்பினர் களாக இருந்தவர்களும் அதேபோல் நோய்வாய்ப்பட்டவர் களும் உறுப்பினர்களாக இருந்ததால், ஆயுள் காப்பீட்டுக் கழகம் அதற்கான நஷ்ட ஈட்டைக் கொடுப்பதிலே பெருத்த நஷ்டம் ஏற்பட்டு, அதை தமிழக அரசு திருப்பிக் கொடுக்க வேண்டுமென்கிற ஒரு நிலை ஏற்பட்டது. எனவேதான், ஒட்டு மொத்தமாக தீர்மானம் செய்யப்பட்டு, இறுதியாக இந்த அரசாணை வெளியிடப்பட்டு, இந்தத் திட்டம் அமுலாக்கப் படுவதில் ஏற்பட்ட சிரமங்களின் அடிப்படையிலே நிறுத்தப் பட்டது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். எஸ். ராம சுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஏழை எளியோர்களுக்கான இன்ஷூரன்ஸ் திட்டங்கள், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்காலத்தில் ஏதாவது, நமது அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 56, திரு. கு. தங்கமுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

56—

## தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஒட்டுமொத்தப் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை

*9473—திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் நெற்பயிர் பூச்சி தாக்குதலினால் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதைக் கட்டுப்படுத்த அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஒருங்கிணைந்த ஒட்டுமொத்தப் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தஞ்சை மாவட்டத்தில் நெற்பயிர்கள், பூச்சித் தாக்குதலினால் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஒருங்கிணைந்த ஒட்டுமொத்தப் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடந்த சில ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை நெற்பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை முட்டைப் பருவத்திலோ